DEPOSITION OF WITNESS
(In the Court of the Subordinate Judge`s Sankarankovil )
MCOP .No.40/2019
****

| | | |
|---|---|---|
| Deposition of Witness for | : | RW2 |
| Name | : | **சித்ரா** |
| Father`s Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |
| Date | : | 25.09.2023 |

Solemnly affirmed by Selvi.M.K.Anusha, Subordinate Judge, Sankarankovil in accordance with section 6(2) of Act No.44 of 1969.

**முதல் விசாரணை**

I do solemnly affirm that what I shall state that shall be truth, the whole truth and nothing but the truth.

நான் தற்போது வட்டார போக்குவரத்து அலுவலகம் சங்கரன்கோவிலில் உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து எங்கள் அலுவலகத்திற்கு அழைப்பாணை வந்தது. எங்கள் அலுவலகத்தில் எனக்கு சாட்சியம் அளிப்பதற்காக வழங்கப்பட்ட அனுமதி கடிதம் **எ.மா.சா.ஆ.5** ஆகும். நான் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். வாகன பதிவெண். TN76 U 3328 வாகன ஆய்வு அறிக்கை உண்மை நகல் **எ.மா.சா.ஆ.6** ஆகும். வாகன பதிவெண். TN72A4475 வாகன ஆய்வு அறிக்கை உண்மை நகல் **எ.மா.சா.ஆ.7** ஆகும். மேற்படி இரண்டு வாகன ஆய்வு அறிக்கைகளிலும் ஆய்வின் போது வாகன ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் முன்னிலைப்படுத்தப்படவில்லை. இரண்டு வாகனங்களுக்கான காப்பீடு தகவலும் அளிக்கப்படவில்லை. எங்களிடம் தாக்கல் செய்யவும்படவில்லை. உங்களுக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணையில் இரண்டு வாகனங்களுக்கான காப்பீடு விவரங்கள் கோரப்பட்டிருந்தது.

மேற்படி இரண்டு வாகனங்கள் பதிவெண். TN76 U 3328 குறித்த வாகனத்தின் விவரம் அடங்கிய நகர் **எ.மா.சா.ஆ.8** மற்றும் **9** ஆகும். மேற்படி எ.மா.சாஆ.8 மற்றும் 9 ன் அடிப்படையில் அந்த வாகனத்தின் காப்பீடு உண்மை தன்மை குறித்து உங்களால் சொல்லமுடியுமா என்றால் முடியாது.

**மனுதார் தரப்பு குறுக்கு விசாரணை**

எ.மா.சா.ஆ–9 வாகன பதிவு எண் TN76 U 3328 தொடர்புடையது என்றால் சரிதான். மேற்படி வாகனம் யூனைடெட் இந்தியா காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி இரு வாகனத்தின் காப்பீட்டு எண். 117754 என்றால் சரிதான். மேற்படி காப்பீடானது 11.09.2014 முதல் 11.09.2015 வரையிலும் நிலுவையில் இருந்தது என்றால் சரிதான். நீங்கள் முன்னிலைப்படுத்திய ஆவணங்கள் அடிப்படையில் வாகன பதிவெண் TN76 U 3328 விபத்து தினத்தன்று முழுமையாக காப்பீடு செய்யப்பட்டு இருந்தது என்றால் சரிதான். நீங்கள் விபத்து நடந்த இடத்தை நேரடியாக பார்வையிட்டு வாகனத்தையும் பார்வையிட்டு, வாகன உரிமையாளரிடம் அந்த வாகனம் தொடர்பாக அனைத்து ஆவணங்களையும் பெற்று, அதில் இருக்கும் தகவல்களை தான் உங்கள் ஆவணத்தில் பதிவு செய்வீர்கள் என்றால் சரிதான். அதன் அடிப்படையில் தான் எ.மா.சா.ஆ.9 தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரிதான்.

**ம.வி இல்லை.**